மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# வலையர் வரலாறும் மரபும்

**சி. செல்வராணி**
நிறைஞர்பட்ட ஆய்வாளர்
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

**முன்னுரை**

மனித இனத்தின் பண்பாட்டையும் பழமையையும் பாதுகாத்து வாழ்ந்து வருகிற வலையர் சார்ந்து வரலாற்றுக் கதைகள் கூறப்படுகின்றன. வானிலையில், கால்நடைகளின் இயல்பு, அவற்றின் நோய்கள், மருத்துவ முறைகள், பருவகால மாற்றங்கள் பற்றி அறியும் திறன் வலையர் இன மக்களிடம் உண்டு. அம்மக்களின் வரலாறு பண்பாடு அவர்களுக்கே உரிய மரபு ஆகியன இவ்வியலில் விளக்கப்படுகிறன.

**வலையர் விளக்கம்**

வலையர் என்பவர் வேட்டையாடச் செல்லும்போது அங்கு ஒரு பிரிவினர் வலையினைத் தீயில் எரித்துக்கொண்டு இருந்தனர். அதனைப் பார்த்த வலையர் இனத்தவர் எரித்த அச்சினை கூர்மையாகக் கவனித்து வலை பின்னினர். அதனை எப்படிப் பயன்படுத்துவது என்று சிந்தித்துப் பிறகு மீன் பிடித்தனர். முயல்வலை, மீன்வலை, கன்னி வலையமைத்தல் எனப் பலவகை வலைகளைக்கொண்டு வேட்டையாடினர். வலையர்கள் அதிகமாக எலி வேட்டைக்குச் செல்வார்கள் என்பது களப்பணி மூலம் அறியப்பட்ட செய்தி.

**வலையர்**

வலையர் வலையால் மீன்களைப் பறவைகளையும் பிடிப்பவர்கள். மணமகனின் சகோதரி பெண்ணுக்குத் தாலி கட்டுவார். திருமணத்துக்கு முன் பெண்கள் குழந்தை பெறுவது குற்றமாகக் கருதப்பட மாட்டாது. “திருமணத்திற்கு முன் பிறக்கும் குழந்தைகளை வேறுபாடின்றி வலையர் இனமக்கள் தங்கள் இனத்துடன் சேர்த்துக் கொள்வார்கள். 'வியபிசாரிப் பெண்களை எருக்கமாலை சூட்டிச் சேற்றுக் கூடையைச் சுமந்து கிராமத்தைச் சுற்றிவரச் செய்வார்கள்” என்ற வாக்கிற்கேற்ப இப்பழக்கம் வலையர் இன மக்களிடம் இன்றும் காணமுடிகிறது. “அம்பலக்காரன், சேர்வைக்காரன், சிவியான், வேடன், குருவிக்காரன் முதலியனவும் இவர்களின் பெயர்களாக

வழங்கப்படுகின்றன.” வலையர்கள் சிங்கப்பிடாரி, அய்யனார், பதினெட்டாம்படிக் கருப்பன் முதலிய தெய்வங்களை வணங்குகின்றனர்.

**அம்பலக்காரன்**

அம்பலக்காரன் கண்ணப்ப நாயனாரின் வழித்தோன்றல் எனக்கூறுவர். கள்ளச்சாதி இனமுடைய ஒரு வகுப்பினர், இவர்கள் வேளாண்மை செய்வதோடு கிராமக் காவலும் புரிவர். “சேர்வைக்காரன், முத்திரையன், மளவராயன் முத்தரசன், வன்னியன் என்பனவும் இவர்கள் இனப்பெயர்களாக வழங்கப்படுகின்றன.”

இவர்கள் குலத்தலைவன், காரியக்காரர் ஆவார். இது பரம்பரையாகத் தந்தைக்கு, மகனுக்கு என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. காரியக்காரனின் சேவுகன் குடிப்பிள்ளை எனப்படுவான். வலையரினின்றும் பிரிந்து வாழும் ஒரு பிரிவினரே அம்பலக்காரன் எனக் கருதப்பட்டனர். “ஆளப் பிறந்தவன் அம்பலக்காரன் அம்பலக்காரனுக்கு ஆயிரம் வழி” என்று பழமொழி உண்டு.

**கண்ணப்ப குல வலையர்**

வேடர் குலத்தைச் சேர்ந்தவர் கண்ணப்பர், வேட்டையாடி உணவு தேடும் பழக்கமும், வேட்டைப்பொருட்களை ஆண்டவனுக்குப் படையலிட்டு மகிழும் குணமும் உடையவராய் பக்தி மார்க்கத்தில் திளைத்தவர். தினந்தினம் தான் வேட்டையாடிக் கொணர்ந்த மாமிசத்தைச் சுட்டுப் படையலிட்டு மகிழ்ந்தார். ஆண்டவனும் வனவாசியான வேடன் கண்ணப்பரின் அன்புப் படையலை ஏற்றுக்கொண்டார். ஒரு நாள் தனது பாசமிகு பக்தனைச் சோதித்துப் பார்க்க ஆண்டவன் எண்ணினார். வேடன் கண்ணப்பர் தன்னை நாடிவரும் சமயம் தனது ஒரு கண்ணில் இரத்தம் வழியுமாறு செய்தார். பக்தர் கண்ணப்பர், இதனைக் கண்டு பதறினார். செய்வதறியாது, தனது கண்ணை ஈட்டியால் பறித்து ஒரு கண்ணில் வைத்தார். மற்றொரு கண்ணிலும் இரத்தம் வந்தது. இதனைப் பார்த்த கண்ணப்பா தனது காலை எடுத்து சிவபெருமான் கண்மீது வைத்துவிட்டு ஈட்டியால் மற்றொரு கண்ணைப் பறித்து ஒட்டவைத்தார். இத்தகைய பாசமிகு பக்தன் கண்ணப்பரின் கருணையால் அகம் மகிழ்ந்து அவரைக் கண்ணப்ப நாயனராக ஏற்று முக்தியளித்தார். இவ்வாறு கண்ணப்பா வேட்டைத் தொழில் செய்வதால் வலையர் இனமக்கள் கண்ணப்ப குல வலையர்கள் தோன்றியதாகப் புராணச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

**வலையர் இனப்பிரிவு**

வலையர் ஒரு காலத்தில் ஒன்றாக வாழ்ந்து பிற்காலத்தில் பிரிந்து தனித்தனிக் குலங்களாகக் கூட்டங்களாக வாழ்வதற்காகக் கூறப்படுகிறது. வலையர்கள் தனிக்குலமாகத் தனித்து வாழத் தொடங்கியதுடன் தங்களுக்குள் பல கூட்டங்களாகவும் பிரிந்தனர். அவை:

வலையன் கூட்டம், அய்யனார் கூட்டம், சிலைக்காரி கூட்டம், பண்டார கூட்டம், காமாட்சியம்மன் கூட்டம், ஒத்த பனைத்தன் கூட்டம்.

**முத்தரையர் பெயர்க்காரணம்**

முத்தரையர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்ட மூன்று தரைகளையும் முத்தரைய மன்னர்கள் ஆட்சி புரிந்தால் (முத்+தரை) முத்தரையர்கள் என்று அழைக்கப்பெறுகிறார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

**முத்தரையர்**

முத்தரையர் என்பவர் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பெரும் பகுதிகளை முத்தரையர்கள் ஆண்டு வந்தனர். முத்தரையர்கள் கி.பி.எட்டாம் நூற்றாண்டின் இடையில் இருந்து கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையில் உள்ள ஒன்றரை நூற்றாண்டுகள் முத்தரையர்கள் ஆட்சி செய்துள்ளனர். ‘பழந்தமிழ் குடியினராக முத்தரையது வரையர் வன்மை பெருமுத்தரையர் பெரிதும் வந்தீயும் கருணைச் சோறு’ என்று பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய நாலடியாரில் பெரிதும் புகழப்பட்டுள்ளது. அதைப்போல சோழர் சாம்ராஜ்ஜியத்தை நிறுவிய விசயாலய சோழன், முத்தரைய மன்னர், பேரரசர் பெரும்பிடுகு முத்தரை மன்னனிடம் தளபதியாக இருந்தார் என்ற வரலாற்றுச் செய்தி கூறப்படுகிறது.

**வலையர் வாழ்விட அமைப்பு**

மனிதனாகப் பிறந்த அவைருக்குமே அவர்களின் வசதிக்கேற்ப குடியிருக்க ஓர் இடம் அவசியத் தேவையாக உள்ளது. வலையர் இனமக்கள் முல்லை நிலத்தவர். அவர்கள் வாழ்விடம் காடும் காடு சார்ந்த இடமான இருப்பிடம் கூரைவீடாக இருந்தது. சமுதாய மாற்றத்தின் காரணமாக இப்போது ஓட்டுவீடு, காரவீடு எனப் பல வகையான வீடுகளில் வசித்து வருகின்றனர். கூரைவீடு இன்றும் உண்டு. அவர்களிடம் சேமிப்பு கிடையாது. அன்றாட தேவைக்கேற்ப வருமானம் வைத்திருக்கிறார்கள். இப்போது மழை இல்லாத காரணத்தால் காட்டு வேலையும் இல்லை. விவசாயமும் குறைவாக நடைபெறுகிறது.

**வீடுகளின் அமைப்பு**

ஒரு வீடானது மொத்த வடிவமைப்பால் ஒன்றாகவும் உள்கட்டமைப்பில் பலவாகவும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்து வீடுகள் போன்று மண்சுவர் வைக்கப்பட்டுத் திண்ணைகளோடு கூடிய வீடுகளும் குடிசைகளாகவும் கல்லால் கட்டப்பட்ட சுவர்களும் உடைய வீடுகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு வீட்டின் முன்பும் ஆட்டுப்பட்டி அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வீடுகளின் அமைப்பில் சிறிது மாறுதல் ஏற்பட்டுள்ளது. சிமெண்ட், செங்கல் வைத்துக் கட்டப்பட்ட மாடி வீடுகளைக் காணமுடிகின்றனது.

**உடலமைப்பு**

வலையர் இனமக்கள் கருப்பு நிறம் உடையவர்கள். இவர்கள் செம்பட்டைத் தலைமுடியை உடையவர்கள். பெண்கள் பின்னிச் சடை போடுவர்கள். இவர்கள் அதிகமாகக் காடு சார்ந்த இடங்களில் தான் இருப்பார்கள். (எ.கா) சிறுமலை அடிவாரம், கடவா குறிச்சி மலை அடிவாரம் ஆகும்.

ஆடவர்க்கும் பெண்டிருக்கும் மூக்கு பெரும்பாலும் பெரியதாகவே உள்ளது. கண்கள் உருண்டையாகவும் வட்ட முகத்தோடும் இம்மக்கள் காணப்படுகின்றனர். சிலருக்குத் தலைமுடி பரட்டையாகவும் மயிர் சுருட்டையாகவும் உள்ளது. வயது முதிர்ந்த பெண்கள், ஆண்கள் இருவரும் கையில் கம்பு ஒன்றை எப்போதும் வைத்துக்கொள்வார்கள், கீழே விழுந்து விடக்கூடாது என்பதற்காக.

**கல்வி நிலை**

வலையர்கள் தங்கள் குழந்தைகளும் கல்வி கற்று உயர்நிலைக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம்கொண்டு அவர்களைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். நிறையப் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கட்டாயமாகக் கல்வி கற்க அனுப்பி வைக்கின்றனர். குழந்தைகள் எட்டாம் வகுப்பு முடிந்தவுடன் உயர்கல்விக்காக நிலக்கோட்டையிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். பனிரெண்டாம் வகுப்பு வரைக் கட்டாயமாகக் குழந்தைகளைப் படிக்க வைக்கின்றனர். அரசு வேலை வாய்ப்புகளைப் பெறவும் விருப்பம் கொண்டுள்ளனர்.

**பொருளாதார நிலை**

பொருளாதாரம் என்பது பொருளைப் பற்றியும் பொதுநலத்தைப் பற்றியும் சார்ந்துள்ளது. வலையர் நிலப்பின்னணியைக் கொண்ட விவசாயத்தை மேற்கொண்டனர்; உற்பத்தியைப் பெருக்கினர். பொருளாதார நிலையைப் பார்த்தால் உழைக்கும் மக்களுக்கு உழைப்பிற்கு எற்ற ஊதியம் இல்லாமல் வாழ்கின்றனர். பருவ மழையை நம்பும் வேளாண்மை ஊரான வீலிநாயக்கன்பட்டியில் நீர்த்தேக்கங்களை உருவாக்கி வேளாண்மைக்கு ஊக்கம் அளிக்கின்றனர்.

வலையர் இனமக்களின் முதன்மைத் தொழில் வேட்டையாடுதல், தேன் எடுத்தல் ஆகும். ஆனால் இப்போது விவசாயம் செய்வதற்கு மழை பொய்த்ததால் பொருளாதார நிலை வறுமையை நோக்கிச் செல்கின்றது. மழையை எதிர்பார்த்துதான் அவர்களின் வாழ்க்கையை இருந்தது. வலையர் இனத்தினர் விவசாயம் செய்தாலும் பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் தான் இருக்கின்றனர்.

**பழக்கவழக்கம்**

பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்க நிலை எனவும் சமுதாயம் சார்ந்த தொடர்நிலை எனவும் கூறலாம். பழக்கவழக்கம் ஒவ்வொரு இனக்குழுவிற்கும் சமுதாயத்திற்கும் தனிப்பட்ட முறையில் அமைவதைக் காணமுடிகிறது. தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைப் பழக்கம் எனவும் இனக்குழுவிலுள்ள பலருடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இயைந்து நிற்பது வழக்கம் எனவும் சமூகவியலார் கூறுவர். தனிமனிதன் பழகிப்போன முறையில் திரும்பத்திரும்பச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட செயலைப் பல மனிதர் ஒன்றாகச் சோர்ந்து செய்கின்றபொழுது அது வழக்கம் என்ற சொல் இன்று சமுதாயம் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**உணவுப்பழக்க வழக்கம்**

எத்தகைய நிலையில் உள்ளோர்க்கும் உணவு, இன்றியமையாதது. இதனை "உண்பவை நாழி" என்று புறநானூற்றுப் பாடல் கூறுகிறது. மனிதன் உயிர்வாழ முக்கியத் தேவையாக உணவு அமைகிறது. உணவு ஈட்டுவதற்காக மனிதன் பல இடங்களுக்கும் செல்கிறான். பண்டைத்தமிழர் தம் நிலப்பகுதியில் விளையும் உணவுகளையும் பண்டமாற்று மூலம் பெற்ற உணவுகளை உட்கொண்டனர்.

வலையர்கள் இயற்கையாகக் கிடைக்கும் பழங்கள், கிழங்குகள், கீரைகள், காளான்கள் முதலான பயிர் உணவுகளையும், ஆடு, கோழி, குருவி, புறா முதலான இறைச்சி உணவுகளையும் உண்டு வாழ்கின்றனர். நாவற்பழம், இலந்தைபழம், ஈச்சம்பழம், சூரம்பழம் போன்ற பழவகைகளையும் உட்கொள்கின்றனர்.

இன்று அதிகமாக அரிசியை உணவுப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர். அரிசியைப் பயன்படுத்தி இட்லி, தோசையை உணவாக உட்கொள்கின்றனர். இன்றைய வலையர் இனமக்களின் உணவுமுறை பொதுவான உணவு முறைகளைப் போன்றே அமைந்துள்ளதைக் களப்பணியின் மூலம் காணமுடிந்தது.

**வலையர் சார்ந்த மருத்துவம்**

காடுகளில் வேலைபார்க்கும் இம்மக்களுக்கு அந்நாளில் நேரம் பார்ப்பதற்குக் கடிகாரம் என்பது இல்லை. அவ்வாறு நாட்டுப்புற மருத்துவத்தையே விரும்பிய வலையர்கள் எந்த ஒரு நோய் வந்தாலும் பச்சிலை மருத்துவத்தைக் கையாண்டுள்ளனர். நோய்வாய்ப் பட்டவர்களுக்குச் 'செம்மரக்குறிச்சி' என்னும் மூலிகையின் சாறு பிழிந்துக் கொடுப்பார்கள். அதன் இலையைத் தலையில் தேய்த்துக் கொண்டால் நோய்க் எதும் அண்டாது என்று நம்புகிறார்கள்.

குருவியின் சத்தமே இவர்களுக்குக் கடிகார முள்ளின் ஓசை போன்று இருந்துள்ளது.

**காதுவலி**

வலம்புரிக்காய், இடம்புரிக்காய், இவற்றை தேங்காய் எண்ணெயில் காய்ச்சி வலிக்கும் காதில் ஊற்றினால் காதுவலி குறையும் என்பது காதுவலிக்கான வலையரிடம் உள்ள மருத்துவம் ஆகும்.

**ஒற்றைத் தலைவலி**

காலையில் சூரியன் வருவதற்கு முன் ஒற்றைத் தலைவலிக்கு மருந்து கொடுப்பார்கள். மருந்தின் பெயர் 'சொல்ல மருந்து' என்று கூறுகின்றனர்.

**கருத்தடை**

குழந்தை உண்டாவதைத் தடுக்கும் முறையைக் கருத்தடை என்று கூறுவர். சில ஆண்டுகளுக்குமுன் பெண்கள் கர்ப்பம் தரிக்காமல் இருப்பதற்காக நாட்டுப்புற மக்கள் நவீன மருத்துவத்தைவிட எளிய நாட்டுப்புற மருத்துவத்தைக் கையாண்டு உள்ளனர்.

துளசி இலைகளைத் தினமும் சிறிதளவு சாப்பிட்டு வந்தால் கருத்தடை ஏற்பட்டுக் குழந்தை உண்டாவது தடுக்கப்படுகிறது.

**மாந்திரீக மருத்தவம்**

இயற்கை மருத்துவத்தைப் பின்பற்றுவது போலவே நம்பிக்கை மருத்துவத்தையும் பின்பற்றுகின்றனர். நம்பிக்கை மருத்துவம் என்பது மருந்துகளைக் கொடுத்து நோயைக் குணமடையச் செய்யும் முறைக்குச் சற்று மாறுபட்டதாகும். பூசாரி அய்யனன் என்பவர் நாய்க்கடி, அம்மை, காய்ச்சல் முதலியனவற்றை மந்திரம் மூலம் குணப்படுத்ததுகிறார். மந்திரம் ஓதுவதன் மூலம் நோய் குணமாகும் என்ற நம்பிக்கையை வலையரிடம் காணமுடிகிறது.

**கண்ணேறு படுதல்**

மந்திரித்தல், குழந்தையின் மீது மெதுவாகக் காற்று வரும்படி துண்டினை மடக்கிக் கொண்டு வீசுவர். மூன்று வீட்டுக் கூரை, குச்சி, மிளகாய்வற்றல், உப்பு இவை மூன்றையும் சிறிது எடுத்துக் குழந்தையை மூன்று தடவை தலையைச் சுற்றி முச்சந்தியில் போடுவார்கள். இல்லையென்றால் அடுப்பிலும் போடுவார்கள், இவ்வாறு செய்வதால் குழந்தைக்குக் கண்ணுபடாது என்பது நம்பிக்கை.

**நம்பிக்கை மருத்துவம்**

தங்களது குலத்தெய்வங்களை வணங்கிக் கோயிலில் அபிஷேகம் செய்வார்கள. குழந்தை பிறக்கும்போது தாயின் அடி வயிற்றில் விளக்கு எண்ணெயை மந்திரித்து கர்ப்பமான பெண்ணின் அடிவயிற்றில் தடவுவர். இதனால் குழந்தை எளிதாகப் பிறக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

**கை, கால் குடைச்சல்**

ஆமணக்கு எண்ணெயை மந்திரித்து தேய்த்தால் கை, கால் குடைச்சல் தீரும் என்று நம்புகின்றனர். மாந்திரிக மருத்துவம், நம்பிக்கையற்றது என்றாலும் வலையர் இனமக்களிடம் இன்றும் இவற்றைக் காணமுடியும். மருத்துவமனையைச் சிலர் நாடிச் சென்றாலும் இயற்கை மருத்துவத்தைத் தொடர்ந்து கொண்டுதான் உள்ளனர்.

**அம்மை**

கோடைக்காலத்தில் ஏற்படும் இந்நோய் அம்மனின் சீற்றத்தால் உண்டாகிறது என்று இம்மக்கள் நம்புகின்றனர். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி அவரது வீட்டிலுள்ளவர்களும் புதிய முறையைக் கடைபிடிக்கின்றனர். இந்நோய் தாக்கியவருக்கு இளநீர், பனங்கற்கண்டு, வாழைப்பழம் போன்ற குளிர்ச்சிதரும் பொருள்களை உண்ணக் கொடுக்கின்றனர். இதனால் அம்மைக் கொப்புளம் மறையும் என்கின்றனர். பூசை செய்த மஞ்சள் நீரை வீட்டில் உள்ளவர்களிடம் கொடுப்பார்கள்; வீட்டிலும் தெளிப்பார்கள். அம்மைநோய் தாக்கியவரை வேப்பிலையில் படுக்க வைக்கின்றனர். வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்து அரைத்துக் கன்னத்தில் பூசிவிடுகின்றனர். இவ்வாறு செய்தால் உடல் குளிர்ச்சியடைந்து இந்நோய் குணமாகும் என்று கூறுகின்றனர்.

**பேறுகாலம்**

பசலைக்கீரையை நறுக்கி வேகவைத்துத் தண்ணீரை இறுத்துச் சோற்றில் ஊற்றிச் சாப்பிட வேண்டும். கீரையைச் சாப்பிடக் குழந்தை பெற்ற பின் உண்டாகும் குடல் புண் ஆறிவிடும். விளக்கெண்ணையைக் குடித்தால் சுகப்பிரசவம் நடக்கும் என்ற நம்பிக்கையைக் காணமுடிகிறது.

**குழந்தை பிறப்பதில் சிக்கல்**

குழந்தை பிறப்பதில் சிக்கல் ஏற்படும்போது மிளகை நுணுக்கி தேனில் கலந்து உண்டால் குழந்தை எளிதாகப் பிறந்துவிடும். சீரகத்தைப் பொடித்து புளிச்ச நீரில் கலந்து குடிக்க வேண்டும். பசலைக்கீரை, முள்ளுக்கீரை வேர் ஆகிய இரண்டையும் வேகவைத்துத் தண்ணீர் குடித்தால் குழந்தை நன்றாகப் பிறக்கும், தீட்டும் நன்றாகப் போகும்.

**முடிவுரை**

வலையர்கள் தங்களுக்கெனத் தனித்து பண்பாட்டை இன்றுவரையிலும் பாதுகாத்து தான் வருகின்றனர். இயற்கை மருத்துவத்தில் சிறந்து விளங்கக்கூடியவர்களாக அவர்கள் இருந்து வருகின்றனர்.

வலையர் இனமக்கள் இயற்கையாகக் கிடைக்கும் உணவுப் பொருட்களை உண்டு ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்கின்றனர்.

வலையர்களிடம் நம்பிக்கை பற்றிய மருத்துவ முறைகள் இன்றும் நடைமுறையில் உள்ளன.

**பார்வை நூல்கள்**

1. சிற்பி பாலசுப்ரமணியம், திருக்குறள், பாவை பிரிண்டர்ஸ், முதற்பிரிப்பு, 2012.
2. கந்தையா பிள்ளை.நசி., தென்னிந்திய குலங்களும் குடிகளும், சந்தியா பதிப்பகம், 2015.
3. மாற்கு, அருந்ததியர் வாழும் வரலாறு, நாட்டார் வழக்காற்றியல் மையம் பாளையங்கோட்டை